# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.
## SESSIONS CASE NO. 40 OF 2013
## Deposition of Witness for : PW-1

| | |
|---|---|
| Name | : திரு. ரமேஷ் |
| Father's Name | : மன்னார் |
| Village | : மன்னார்பாளையம் |
| Taluk | : தி.மலை |
| Caste | : ரெட்டியார் |
| Calling | :கண்டக்டர் |
| Religion | : இந்து |
| Age | :44 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 20-08-2019 .

முதல் விசாரணை.

நான் தற்போது மன்னார்பாளையம் கிராமம் திருவண்ணாமலை தாலுக்காவில் குடியிருக்கிறேன். எனக்கு திருமணம் ஆகி விட்டது. என் மனைவி பெயர் சாந்தி. நான் அரசு போக்குவரத்து கழகத்தில் நடத்துநராக பணி புரிந்து வருகிறேன். என் அம்மா பெயர் தனலட்சுமி. என் தங்கை பெயர் ஜெயந்தி. என் தம்பி பெயர் வெங்கடேசன். இவர்கள் அனைவருக்கும் திருமணம் ஆகி விட்டது. இந்த கொலை சம்பவத்திற்கு 3 மாதத்திற்கு முன்பாக தான் என் தம்பி வெங்கடேசனுக்கு திருமணம் ஆனது. என் தம்பி மனைவி பெயர் அம்பிகா. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகள் எனக்கு பங்காளி உறவு முறை. காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 13.6.2012ம் தேதி மதியம் சுமார் 12.30 மணிக்கு நான் நிலத்தில் தண்ணீர் பாய்ச்சி விட்டு வந்து கொண்டிருந்தேன். எதிரிகள் ராஜாமணி, வீராசாமியும் எதிரியில் வண்டியில் வந்து உன் தம்பியை அடக்க மாட்டாயா, என் தங்கச்சி வளர்மதியினுடைய செல்போன் நெம்பரை சேல்ஸ்மேன் சின்னதம்பியிடம் கொடுத்து அவர் பேசிக் கொண்டிருந்தார்.

எதுவாக இருந்தாலும்ள என் தம்பியை பார்த்து விசாரிச்சு சொல்லு என்று சொன்னேன். உடனடியாக நான் வீட்டிற்கு வந்து என் தம்பி மாமியார் இறந்து 2 நாள் ஆனதால் அந்த ஈமச்சடங்கு பற்றி பேசிக் கொண்டிருந்த போது , இது சம்மந்தமாக விசாரித்த போது என்னப்பா செல்போன் நெம்பரை அந்த சின்னதம்பிக்கு கொடுத்தாயா என்று சொன்னேன். அந்த பெண் தான் அவரிடம் கொடுத்து பேசிக்கொண்டிருந்தது. நான் செல்போன் நெம்பரை கொடுக்கவில்லை என்று சொன்னான். அப்போது வீராசாமியும், ராஜாமணியும் அங்கு வந்தார்கள். அப்போது இறந்து போன வெங்கடேசன் அவர்களிடம் செல்போன் எதுவும் கொடுக்கவில்லை என்றும், உன் தங்கை தான் கொடுதத்து என்று சொன்னார். அப்போது வீராசாமி போய் ராஜாமணியிடம் தங்கச்சியை கூட்டிக் கொண்டு வா என்று சொன்னார். உடனே அவருடைய தங்கை வளர்மதியை கூட்டிக் கொண்டு வந்தார்கள். அப்போது வெங்கடேன் வளர்மதியிடம் நானாகவா சின்னதம்பியிடம் செல்போன் நெம்பளைரை கொடுத்தேன் என்றும், நீ தான் கொடுத்தாய் என்று சொன்னார். அப்போது வீராசாமியை பார்த்து ராஜாமணியிடம் இவனை அடித்து கொல்லுடா என்று சொன்னார். அப்போது ராஜாமணி அங்கிருந்த கருங்கல்லை எடுத்து வெங்கடேசனின் நெஞ்சில் குத்தினார். மார்பில் குத்தினார். குரல்வளையையும் பிடித்து அழுத்தினார். சம்பவத்தின் போது ராஜாமணி **பயன்படுத்திய கல் சான்றுப் பொருள் 1 ஆகும்.** பிறகு வீராசாமியும் அங்கிருந்த செங்கல்லை எடுத்து என் தம்பியின் இடது பக்க மார்பிலும், இடுப்பிலும் குத்தினார். அவர் பயன்படுத்திய **செங்கல் சான்றுப் பொருள் 2 ஆகும்.** அதனை தடுக்க போன என்னை அடித்து கீழே தள்ளி விட்டார். வளர்மதி என்பவரும் அரைக்கல் செங்கல்லை எடுத்து என் தம்பி வெங்கடேசனின் உயிர்நிலையிலும், வலதுகால் முட்டியிலும் குத்தினார். **அந்த**

**செங்கல் சான்றுப்பொருள் 3 ஆகும். வெங்கடேசன் மயக்கமாகி விட்டார்.** என் வீட்டிற்கு எதிரில் இருந்த வெங்கடேசனை கூப்பிட்டு என் தம்பியை பார்த்த போது என்னுடைய தம்பி வாந்தி எடுத்தார். பக்கத்தில ரோட்டில போன ஆட்டோவை கூப்பிட்டு என் தம்பியை காட்டாம்பூண்டி அரசு மருத்துவமனையில் என் தம்பியை கொண்டு போய் சேர்த்தோம். அங்கு மருத்துவர்கள் எங்களால் பார்க்க முடியாது என்று திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு கொண்டு போங்கள் என்று சொன்னார். நாங்கள் அதே ஆட்டோவில் திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு என் தம்பியை கொண்டு வந்தோம். மருத்துவர் பரிசோதித்து என் தம்பி ஏற்கனவே இறந்து விட்டார் என்று கூறினார். அதன் பிறகு 3-30 மணி நேரத்திற்கு போய் தச்சம்பட்டு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். **நான் கொடுத்த புகார் மனு அரசுத்தரப்பு சான்றாவணம் 1 ஆகும். என்னைஇந்த வழக்கு** சம்மந்தமாக நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திலும் விசாரணை செய்தார்கள். இது சம்மந்தமாக போலீசார்என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

13.6.2012ம் தேதி எனக்கு பணி இருந்தது. ஆனால் அன்றைய தினம் நான் பணிக்கு செல்லவில்லை. என்னுடைய தம்பி மாமியார் இறந்ததால் அது தொடர்பாக நான் விடுமுறை கேட்டிருந்தேன். என்னுடைய தாயார் மன்னார்பாளையத்தில் உள்ள ஆரம்ப சுகாதார பள்ளிக்கூடத்தில் சத்துணவு சமையலராக 20 வருட காலமாக பணியில் இருக்கிறார். என்னுடைய வீடும் , எதிரிகள் வீடும் ஒரே தெருவில் இல்லை. இறந்து போன என் தம்பி வெங்கடேசனுக்கு திருமணத்தின் போது 33 வயதாகி இருந்தது என்றால் சரி. என் தம்பியின் மனைவி பெயர் அம்பிகா. உறவுகார பெண். திருமணத்தின் போது அவருக்கு வயது 21 என்றால் சரி.

திருமணம் ஆகி என் தம்பி மனைவி 3 மாத காலம் எங்கள் வீட்டில் தான் இருந்தார். என் தம்பிக்கும் எங்கள் ஊரில் உள்ள ஒரு உறவுகாரருக்கும் தவறான உறவு தொடர்பாக கிராமத்தில் பஞ்சாயத்து செய்யப்பட்டது என்று சொன்னால் தவறு. என் வீட்டிற்கு பக்கத்தில் ராமகிருஷ்ணன் வீடு உள்ளது . பக்கத்தில் 20 அடி தூரம் உள்ளது. ராமகிருஷ்ணன் வீட்டிற்கு பக்கத்தில ராமு என்பவருடைய வீடு உள்ளது. என் வீட்டிற்கும், மெயின் ரோடிற்கும் இடையே 50 அடி தூரம் தொலைவு இருக்கும். அந்த மெயின் ரோட்டில் மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரி. சம்பவ தேதியன்று மதியம் 12.00 மணி அளவில் என் விவசாய நிலத்தில் எதிரிகள் பார்க்கவில்லை. ரோட்டில் தான் பார்த்தார்கள். என் வீட்டிற்கும் நிலத்திற்கும் 100 அடி தொலைவு இருக்கும். நிலத்திற்கு பக்கத்தில் இருக்கும் போது எதிரிகள் என்னிடம் பேசி விட்டு சென்று விட்டார்கள். ஒரு கால் மணி நேரத்தில் எதிரிகள் திரும்ப எங்கள் வீட்டிற்கு வந்தார்கள். அவர்கள் எங்கு சென்றார்கள் என்று எனக்கு தெரியாது. அப்போது என் வீட்டில் நான், என் அம்மா, என் தம்பி ஆகியோர் இருந்தோம். என் மனைவி அப்போது அங்கு கிடையாது. என் வீட்டில் ஏதேனும் சத்தம் கேட்டால் மெயின் ரோடில் செல்லும் ஆட்கள் சத்தம் கேட்டு வர வாய்ப்புண்டு என்றால் சரி. எதிரிகள் என் வீட்டிற்கு வந்து என்னிடம் பேசி வளர்மதியை எங்கள் வீட்டிற்கு அழைத்து வர எவ்வளவு நேரம் ஆகியிருக்கும் என்றால் 5 நிமிடத்தில் வளர்மதியை அழைத்து வந்து விட்டார்கள். என் தம்பி அணிந்திருந்த சட்டை மற்றும் லுங்கி ஆகியன ரத்தத்தால் தோய்ந்து விட்டது. ஆட்டோவின் நான் என் தம்பி, இன்னொரு வெங்கடேசன் ஆகியோர் என் தம்பியை காட்டாம்பூண்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். அந்த மருத்துவமனை 2. கி. மீ தூரம்இருக்கும். என் தம்பியை அழைத்துச் சென்று

டாக்டரிடம் காண்பித்தோம். டாக்டர் பரிசோதனை செய்தார். ஆட்டோவில் என் தம்பி நடுவில் தான் உட்கார்ந்திருந்தார். என் தம்பியை ஆட்டோவில் உட்கார வைத்து அழைத்து சென்றோம். ஆட்டோவில் இருக்கும் போது தான் என் தம்பியை மருத்துவர் வந்து பார்த்தார். என் தம்பி மீதிருந்த ரத்தம் என் மீதும், இன்னொரு வெங்கடேசன் மீதும் ரத்தம் படியவில்லை. அந்த ஆட்டோவை ஓட்டிச்சென்றவர் சேகர். அவர் கருவட்டம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்தவர். காட்டாம்பூண்டி மருத்துவமனையில் மருத்துவர் ஒரு அரை மணி நேரம் என் தம்பியை பரிசோதனை செய்தார். அதன் பிறகு அரை மணி நேரத்தில் திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு என் தம்பியை அழைத்துச் சென்றோம். போலீசார் விசாரணையின் போது என் தம்பியின் குரல்வளையை பிடித்ததாக தான் கூறினேன். கழுத்தை பிடித்ததாக கூறவில்லை. என் தம்பியின் செல்போன் நெம்பர் தெரியாது. வீட்டில் உள்ளது. எதிரிகள் என் தம்பியை எதுவும் செய்யவில்லை என்றும், வழக்கிற்காக நான் வேண்டும் என்றே பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சண்டை நடந்த போது பக்கத்தில் உள்ள ராமகிருஷ்ணன் வீட்டில் இருந்தவர்கள் யாரும் வரவில்லை. ராமு வீட்டில் இருந்தும் யாரும் வரவில்லை. அங்கு யாரும் கிடையாது. எதிர்த்த வீட்டு வெங்கடேசன் என்பவரும் நான் கூப்பிட்ட பிறகு தான் வந்தார். மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று கூறியதால் தான் வந்தார். போலீசார் விசாரணையின் போது ஆட்டோ டிரைவர் சேகர் என்பவர் தான் அழைத்துச் சென்றதாக கூறினேன். காட்டாம்பூண்டி மருத்துவமனையில் மருத்துவரை மட்டும் அழைத்து வந்து காண்பித்தோம். எத்தனை நர்ஸ்கள் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. அவர் என் தம்பியை பார்த்து உடனடியாக திருவண்ணாமலை மருத்துவமனைக்கு

எடுத்துச் செல்லுமாறு கூறினார். மற்றபடி வேறு எதுவும் கூறவில்லை. அரசுத்தரப்பு சான்றாவணம் புகார் மனு என் கைப்பட நான் எழுதியது. சா.பொ.2, 3 மற்றும் ஒரே அளவாக உள்ளது என்றால் இரண்டு செங்கல்லும் சிறிது வித்தியாசம் உள்ளது. சா.பொ.2. வீராசாமி என்பவர் அடித்தார். சா.பொ.3. செங்கல்லை வைத்து வளர்மதி என்பவர் அடித்தார். நான் சொல்வது போன்று எவ்வி சம்பவமும் நடைபெறவில்லை என்றும், என் தம்பியை யாரும் குரல்வளையை பிடிக்கவில்லை, அதே போல் என் தம்பியை கருங்கல்லால் , செங்கல்லால் அடிக்கவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. என்தம்பி முறையான வாழ்க்கை வாழவில்லை சில மர்மமான விஷயங்களை மறைப்பதற்காக வழக்கு சம்பவம் மற்றும் சான்றுப்பொருட்கள் அனைத்தும் போலீசாருடன் இணைந்து வழக்கிற்காக தயாரிக்கப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல.

ஒப்பம்/- ரமேஷ்

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/- C. Thirumagal
Principal Sessions Judge,
Tiruvannamalai.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**
**SESSIONS CASE NO. 40 OF 2013**
**Deposition of Witness for : PW-2**

| | |
|---|---|
| Name | : திருமதி. தனலட்சுமி |
| Father's Name | : மன்னார் |
| Village | : மன்னார்பாளையம் |
| Taluk | : தி.மலை |
| Caste | : ரெட்டியார் |
| Calling | :விவசாயம் |
| Religion | : இந்து |
| Age | :55 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 20-08-2019 .

முதல் விசாரணை.

நான் தற்போது பெரியகல்லாப்பாடி மதுரா மன்னார்பாளையம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் சத்துணவு சமையலராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எங்களுக்கு உறவினர்கள். எனக்கு 2 மகன்கள், ஒருமகன் உள்ளார்கள். சாட்சி சொன்ன ரமேஷ் என் மகன். 2-வது மகன் வெங்கடேசன் இறந்து விட்டார். எனது மகள் திருமணமாகி வாழ்ந்து வருகிறது. இறந்து போன என் மகன் வெங்கடேசன் மளிகை கடை வைத்திருந்தார். இறப்பதற்கு 3 மாதத்திற்கு முன் தான் இறந்து போன என் மகன் வெங்கடேசனுக்கு திருமணம் செய்து வைத்தேன். தச்சம்பட்டு புதூரை சேர்ந்த சக்கரவர்த்தி மகள் அம்பிகாவை திருமணம் செய்து வைத்தோம். 2012ம் வருடம் 6-வது மாதம் 13ம் தேதி 12.30 மணிக்கு நான் வீட்டில் இருந்த போது ராஜாமணியும், வீராசாமியும் வந்து என் மகன் வெங்கடேசனிடம் என் தங்கையின் செல்போன் நெம்பரை எப்படி சின்னத்தம்பியிடம் கொடுப்பாய் என்று கேட்டார். அதற்கு என்னுடைய மகன் வளர்மதியை கூப்பிட்டு கேட்குமாறு கூறினார். வீராசாமி ராஜாமணியிடம் போய்

தங்கச்சி வளர்மதியை கூட்டிக் கொண்டு வா என்று சொன்னார். ஒரு 10 நிமிடத்திற்குள் வளர்மதியை கூப்பிட்டுக் கொண்டு வந்து விட்டார்கள். அப்போது வெங்கடேசன் வளர்மதியிடம் நீ தான் தொலைபேசி நெம்பரை என்னிடம் வாங்கி 3 மாத காலமாக பேசிக்கொண்டிருக்கிறாய் என்று கூறினார். வளர்மதி நீ தான் கொடுத்தாய் என்று கூறினார். வீராசாமி ராஜாமணியை பார்த்து அவனை அடித்து கொல்லுங்கடா என்று கூறினார். அப்போது ராஜாமணி இடது கையால் குரல்வளையை பிடித்து கருங்கல்லால் அவரது மார்பில் குத்தினார். அப்போது வீராசாமி செங்க்லலை எடுத்து வெங்கடேசனனின் மார்பிலும், வலது தொடையிலும், காலிலும் குத்தினார். பிறகு வளர்மதியும் செங்கல்லை எடுத்து வெங்கடேசனின் ஆண்குறி மீதும், இடது கால் முட்டியிலும் செங்கல்லால் குத்தினார். என் மகன் மயக்கம் போட்டு விழுந்து விட்டார். பிறகு என் மகனை காட்டாம்பூண்டி மருத்துவமனைக்கு என் பெரிய மகன் ரமேசும், எங்கள் ஊரைச் சேர்ந்த வெங்கடேசனும் அழைத்துச் சென்றோம். அங்கு முடியாது என்றதால் திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லுமாறு கூறினார்கள். அங்கு மருத்துவர் என் மகன் இறந்து விட்டதாக கூறினார். இது சம்மந்தமாக போலீசார் விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

மன்னார்பாளையத்தில் உள்ள ஊராட்சி மன்ற ஆரம்ப பள்ளிக்கூடத்தில் நான் சமையல் வேலை செய்கிறேன் என்றால் சரி. அன்றைய தினம் நான் பள்ளிக்கூடத்திற்கு சென்று செல்வி என்பவரை விட்டு விட்டு திரும்ப வந்து விட்டேன். தச்சம்பட்டுக்கு போனேன். வெங்கடேசனுடைய மாமியார் இறப்பிற்காக தச்சம்பட்டுக்கு போய் விட்டு வந்தேன். என்னுடைய மகன் வெங்கடேசனை அழைத்துச் கொண்டு காட்டாம்பூண்டி மருத்துவமனை வரை அதே ஆட்டோவில்

சென்றேன். எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் கிடையாது என்றும், வழக்கிற்காக வேண்டும் என்றே பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் உண்மையிலேயே நடந்த விவரத்தை தான் கூறுகிறேன். மருத்துவமனைக்கு சென்ற போது எனக்கு மயக்கமாகி விட்டது. அதனால் என்னை வீட்டிற்கு அழைத்து வந்து விட்டார்கள். யார் அழைத்து வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. எனது மகனை திருவண்ணாமலை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று விட்டார்கள். காட்டாம்பூண்டி மருத்துவமனையில் யார் வந்து என் மகனை பார்த்தார்கள் என்று எனக்கு தெரியாது. மருத்துவர் வந்து என் மகனை பார்த்த போது எனக்கு நினைவில்லாமல் இருந்தது. எதிரிகள் மீது உள்ள தனிப்பட்ட விரோதம் காரணமாக வேண்டும் என்றே பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/- தனலட்சுமி

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/- C. Thirumagal
Principal Sessions Judge,
Tiruvannamalai.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**
**SESSIONS CASE NO. 40 OF 2013**
**Deposition of Witness for : PW-3**

| | |
|---|---|
| Name | : திரு முருகேசன் |
| Father's Name | : சின்னைய்யன் |
| Village | : பெரியகல்லப்பாடி |
| Taluk | : தி.மலை |
| Caste | : ரெட்டியார் |
| Calling | :விவசாயம் |
| Religion | : இந்து |
| Age | :53 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 20-08-2019 .

முதல் விசாரணை.

நான் தற்போது பெரியகல்லப்பாடி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் பஞ்சர் கடை வைத்து ஜீவனம் செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்து போன வெங்கடேசன் என்னுடைய மைத்துனர். ஆஜர் எதிரிகளை தெரியும். 6 வருடத்திற்கு முன்னாடி நான் பஞ்சர் கடையில் இருந்த போது மன்னார்பாளையத்தில் உள்ள வீராசாமிக்கு , ராஜாமணிக்கும் இறந்து போனவருக்கும் தகராறு என்று சொன்னார்கள். அதன் பிறகு வெங்கடேசன் இறந்து விட்டார் என்று சொன்னார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.** இல்லை.

ஒப்பம்/- முருகேசன்

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/- C. Thirumagal
Principal Sessions Judge,
Tiruvannamalai.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**
**SESSIONS CASE NO. 40 OF 2013**
**Deposition of Witness for : PW-4**

| | |
|---|---|
| Name | : திரு. பழனி |
| Father's Name | : அப்பாவு |
| Village | : சு. பாப்பாம்பாடி |
| Taluk | : தி.மலை |
| Caste | : ரெட்டியாா |
| Calling | : விவசாயம் |
| Religion | : இந்து |
| Age | :53 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 20-08-2019 .

முதல் விசாரணை.

நான் தற்போது சு.பாப்பம்பாடி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் பயிர் வேலையும், மேஸ்திரி வேலையும் செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். இந்த வழக்கில் இறந்து போன வெங்கடேசன் என்னுடைய சகலன் மகன். அவர் 3 -1/2 வருடத்திற்கு முன்பாக இறந்துவிட்டார். நான் வெளியில் இருந்தேன். சம்பவம் நடந்த போது என் மச்சானுடைய மனைவி தவமணி இறந்து விட்டார். அதனால் நாங்கள் அனைவரும் இறந்தவர் வீட்டில் இருந்தோம். வழக்கு சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. போன் வந்த பிறகு காட்டாம்பூண்டிக்கு வந்து பார்த்தோம். இங்கு முடியாது என்று டவுனுக்கு எடுத்துப் போங்கள் என்று சொன்னார்கள். ஜி.எச்சுக்கு எடுத்துச் சென்றார்கள். நான், இறந்து போனவருடைய அண்ணன் உடன் வெங்கடேசன் அனைவரும் தி.மலை அரசு மருத்தவமனைக்கு எடுத்துச் சென்றோம். மருத்துவர் பரிசோதித்து அவர் இறந்து விட்டார் என்று சொன்னார். நைட் 10.00 மணிக்கு நான் சம்பவ இடம் சென்ற போது அங்கு பொருட்கள் எல்லாம் இருந்தது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

நான் 3.00 அல்லது 4.00 மணிக்கு நான் காட்டாம்பூண்டி மருத்துவமனைக்கு வந்தேன். காட்டாம்பூண்டி மருத்துமனையில் நோயாளிகள் இருந்தார்கள். காட்டாம்பூண்டி மருத்துவமனையில் இங்கு முடியாது என்று மருத்துவர் கூறிவிட்டார். அதன் பிறகு திருவண்ணாமலை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். காட்டாம்பூண்டி மருத்துவமனைக்கு இறந்து போனவருடைய அண்ணனும், நான் , வெங்கடேசனும் இருந்தோம். மருத்துவர் வந்து பார்த்த போது நான் அங்கு தான் இருந்தேன். அதன் பிறகு தான் திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றோம்.

ஒப்பம்/- பழனி

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/- C. Thirumagal
Principal Sessions Judge,
Tiruvannamalai.